பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 26 | புதன்கிழமை | 13.12.2023 | அதிர்வு 134

## யாழ்.பல்கலை மாணவன் போதைப்பொருடன் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன் போதைப்பொருடன் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் 03

# தமிழ் எம்.பிக்களுடனான பேச்சு: திடீரென நழுவினார் ஜனாதிபதி

## இன்று சந்திப்பு நடைபெறாது என்று அறிவிப்பு



(ஏ.ஜே. சார்ள்ஸ்)

நல்லிணக்கம் தொடர்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பிற்பகல் நடத்தவிருந்த பேச்சு திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள நிலையில், பிற்பகல் 3 மணிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் எம்.பிக்களை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஜனாதிபதி சந்தித்துப் பேசவிருந்தார். 03

## தமிழ் இளைஞர்கள் இருவர் படுகொலை




வெவ்வேறு இடங்களில் தமிழ் இளைஞர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் இரு குடும்பங்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

25 வயதுடைய எஸ். கமல் என்ற நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, குருநாகல் மாவட்டம், மாவத்தகம பொலிஸ் பிரிவில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை 02

## கந்தக்காடு முகாமில் இருந்து தப்பியோடிய 130 பேரும் கைது



(கனகராசா சரவணன்)

வெலிக்கந்தை, கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு தடவைகள் பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு தப்பியோடிய 130 கைதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வெலிக்கந்தை பெலிஸார் தெரிவித்தனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில், போதைப்பொருளுக்கு அடிமையாகிய 500 இற்கும் மேற்பட்ட கைதிகளுக்கு நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது. இந்தநிலையில் சம்பவ தினமான நேற்றுமுன்தினம் மாலை 03



## விடைபெறும் கோபால் மஹிந்தவுடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் பதவியில் இருந்து விடைபெறும் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்தார்.

இதன்போது கோபால் பாக்லேவுக்கு மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். 03




கள்ளன்போனபிறகு விஸ்வா பொல்லை எடு எனக் கூறுவது பற்றி எமது ஊரில் ஒரு பழமொழி உண்டு. ஆனால் கள்ளனே செத்த பிறகு, 'பொல்லை எடடா!' எனக் கத்துவது எமது அரசியல்வாதிகளால்தான் முடியும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் சில செயல்பாடுகளும் அப்படித்தான் இருக்கின்றன.

ஏற்கனவே தையிட்டியில் 02

# சீனியைப் பதுக்கி செயற்கை தட்டுப்பாட்டை யாழ் மாவட்டத்தில் ஏற்படுத்த சிலர் முயற்சி!



(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்

யாழ் மாவட்டத்தில் சிலர் சீனியை பதுக்கி செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த முனைவதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத்து தெரிவிக்கும் போதே இதனை அவர் வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்திற்கு 100 மெற்றிக் தொன் சீனி கூட்டுறவு சமாசங்கள் ஊடாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

சீனியின் கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. சீனி தனியார் இறக்குமதியாளர்களிடம் இருப்பதாகவும் செயற்கை தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சீனி பதுக்கி வைத்திருந்தால் நுகர்வோர் அதிகார சபை ஊடாக அவற்றை வெளிக்கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யும் வியாபாரிகள் தொடர்பிலும் பொதுமக்கள் முறைப்பாடுகளை செய்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வற் வரி அதிகரிப்பிற்கு அங்கீகாரம் அலரி மாளிகையில் விருந்துபசாரம்

## அதில் ஜனாதிபதி, பிரதமர், மஹிந்தர் பங்கேற்பு

வற் வரியை 18 வீதம் வரை உயர்த்தும் அரசாங்கத்தின் வரித் திருத்தச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதை கொண்டாடும் வகையில் நேற்று இரவு அலரி மாளிகையில் விருந்துபசாரமொன்று இடம்பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரதமர் நடத்திய இந்த விருந்துபசாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பல அமைச்சர்கள் கலந்து கொண்டனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் நேற்று நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

மக்களின் வாழ்க்கையை மேலும் சீரழிக்கும் வற் வரி உயர்வை கொண்டாடும் அரசாங்கத்தைப் பற்றி மக்கள் மேலும் விழிப்படைய வேண்டும்.

வற் வரியை அதிகரிப்பது தொடர்பான வாக்கெடுப்பில்




கலந்து கொள்ளப் போவதில்லை என தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விகாரை அமைக்கும்போது மௌனமாக இருந்துவிட்டு தற்போது, ஒவ்வொரு பௌர்ணமிக்கும் அங்கு வழிபாடு நடக்கும் போது இவர்கள் போராட்டம் நடாத்துகின்றனர்.

தற்போது அதற்கும் ஒருபடி மேல் சென்று 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிகழ்வு ஒன்றை இன்றுதான் கண்டு குழறுகின்றனர்.

நாச்சிக்குடாவில் ஒரு பாடசாலையின் பெயர் மாற்றம் குறித்து பழைய பெயர், புதிய பெயர்களின் அறிவித்தல் பலகையை முகநூலில் பதிவிட்டு, உணர்வை இப்போது தட்டி எழுப்புகின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஷ்.

'நாச்சிக்குடா அரச தமிழ்க் கலவன் பாடசாலை' என்பது 'நாச்சிக்குடா அரச முஸ்லிம் கலவன் பாடசாலை' ஆக மாற்றப்பட்டிருப்பதாகக் குமுறுகின்றார் சுகாஷ்.

நாச்சிக்குடா பாடசாலையானது முஸ்லிம் பாடசாலை என்பதற்கு 1985 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளின் அரச ஆவணங்களும் உண்டு. எனவே இது இப்போது திடீரென எழுந்த பிரச்சினையன்று.

எனவே இப்பிரச்சினையில் எது சரியென்பதை பதிவு எண் பிரகாரம் கல்வி அமைச்சில் பரீட்சிக்கலாம். அதுதான் இப்போது இவ்விடயத்தை – இச்சர்ச்சையை – தீர்ப்பதற்கான ஒரே வழி!

இது போன்று இன்னொரு சர்ச்சை பெரியமடுவிலும் உண்டு.

பெரியமடு மத்திய மகாவித்தியாலயம் ஆங்கிலத்தில் 'Periyamadu M.M.V' என எழுதப்படுவது. அதனை இப்போது பெரியமடு முஸ்லிம் மத்திய மகாவித்தியாலயம் என மாற்றி விட்டார்கள். எனினும், ஆங்கிலத்தில் இன்னும் அது 'Periyamadu M.M.V.' தான்.

இந்த தசாப்தத்தின் முதல் பாதியாண்டில் றிசாட் பதியுதீனின் அமைச்சராக இருந்த போது, அவரது முயற்சியால் இது முஸ்லிம் பாடசாலை என இரகசியமாகப் பெயர் மாற்றப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

அச்சமயத்தில் மடு வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர் தற்போதைய மாகாணக் கல்விப் பணிப்பாளரான குயின் றஸ்தான். இந்தப் பாடசாலைப் பெயர் மாற்றம் தொடர்பில் அந்தக் காலத்திலலேயே அவர் பிரஸ்தாபித்திருந்தமை நினைவில் உண்டு.

இந்த நிலையில் தற்போது 'திடீரென' விழித்தெழுந்து, இந்தப் பெயர் மாற்றம் தொடர்பில் குரல் எழுப்புகின்றனர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.

எப்போதாவது நேரத்துடன் நடவடிக்கை எடுக்க அவர்கள் முயன்றால் பலன் ஏதும் கிடைக்கலாம்...!

## தமிழ் இளைஞர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய ஆர். ரஞ்சித் என்ற திருமணமான நபரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## விடைபெறும் கோபால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவருடைய தூதுவர் பதவிக் காலம் முழுவதும் இந்தியாவின் அசைக்க முடியாத ஆதரவையும் நட்பையும் அங்கீகரித்து மஹிந்த பாராட்டினார்.





இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த மஹிந்த, விடைபெறும் இராஜதந்திரியின் எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் வெற்றி பெற வாழ்த்துக்களைக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலை மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடிப்படையில் அந்த மாணவனைக் கஞ்சா போதைப் பொருளுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி மாணவன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

## தமிழ் எம்.பிக்களுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லிணக்கம் குறித்து கலந்துரையாடுவதற்கு இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று 11.12.2023 ஆம் திகதியிடப்பட்டிருந்த அழைப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தவிர்க்க முடியாத காரணங்களால் ஜனாதிபதியுடனான இந்தக் கலந்துரையாடல் இன்று நடைபெறமாட்டாது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை 12.12.2023ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி செயலகம் நேற்று அனுப்பி வைத்துள்ளது.

## கந்தக்காடு முகாமில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு வேலியை உடைத்துவிட்டு 50 கைதிகள் தப்பியோடியதையடுத்து அவர்களைப் பொலிஸாருடன் இராணுவத்தினர் இணைந்து கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவு 7 மணியளவில் மேலும் 80 கைதிகள் பாதுகாப்பு வேலியை உடைத்து விட்டுத் தப்பியோடினர்.

நேற்றுமுன்தினம் இரவிரவாக பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதலின்போது 80 கைதிகளும் கைது செய்யப்பட்டனர்.

இதற்கமைய இரண்டு தடவைகளிலும் தப்பியோடிய கைதிகள் 130 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"எங்களுக்குப் புனர்வாழ்வு நிலையத்தில் கட்டுப்பாடுகள் அதிகம். எனவே இங்கு இருக்க முடியாது. எங்களைச் சிறைச்சாலையில் அடைக்குமாறு கோரியே இங்கிருந்து தப்பியோட முயற்சித்தோம்" – என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின்போது தப்பியோடிய கைதிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிக்கந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு அமெ. பிரதிநிதி முழு ஆதரவு!











மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், அவர்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்காகவும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று அமெரிக்காவின் விசேட பிரதிநிதி உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இன சமத்துவம் மற்றும் நீதிக்கான விசேட பிரதிநிதியான டிசைரீ கோர்மியர் ஸ்மித் நேற்று நுவரெலியா மாவட்டத்துக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்க பிரதிநிதியிடம் ஜீவன் தொண்டமான் எடுத்துரைத்தார்.

அத்துடன், மலையக மக்களுக்கும் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தொடர்ச்சியாக குரல் எழுப்பிவரும் சர்வதேச சமூகத்துக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், மலையக மக்களுக்கு உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும், முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத் திட்டங்கள் பற்றி அமைச்சரிடம் அமெரிக்கப் பிரதிநிதி கேட்டறிந்துகொண்டார்.

அமைச்சின் நடவடிக்கைகள் சம்பந்தமான விளங்கங்களையும், கருத்துகளையும் அவர் செவிமடுத்தார்.

இதேவேளை,மலையகஒபெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அமெரிக்கத் தூதரகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆங்கில மொழிப் பயிற்சி நடவடிக்கையை விரிவுபடுத்துவது சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முதலீட்டாளர்களை ஆகர்ஷியுங்கள்!

நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர் செய்வது என்ற பெயரில் ரணில் விக்கிரமசிங்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் கடும் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் உள்ளாகி வருகின்றமை கண்கூடு. இந்த விடயத்தை ஒட்டி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்தின நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி உள்ள விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் இந்த விடயத்தை ஒட்டி உரையாற்றிய அவர், நாட்டில் சட்டவாட்சிக் கோட்பாடு முறையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்ற நம்பிக்கை ஏற்பட்டால் மாத்திரமே வெளிநாட்டு முதலீடுகள் நமக்கு கிடைக்கும் என்பதை தெளிவு படுத்தினார்

"பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகள் என்று கூறிக் கொண்டு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளன.

"இந்த அரசின் வரிக் கொள்கையால் ஒட்டுமொத்த மக்களும் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டுள்ளார்கள். நடுத்தர மக்கள் தமது அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

"சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகளை அரசு பெற்றுக்கொள்வதை நாங்கள் தடுக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அப்பாற்பட்டு அரசாங்கம் செயற்படுகிறது. நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் விதத்தில் வரி விதிக்க நாணய நிதியம் வழி காட்டவில்லை." - என்று சுட்டுகின்றார் ஏரான் விக்கிரமரத்ன.

ஊழல் மோசடியை இல்லாதொழித்து, அரச வீண் செலவுகளை மட்டுப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டது. ஆனால் இந்த யோசனைகள் செயற்படுத்தப்படவில்லை.

வசதி படைத்தவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு எந்த நடவடிக்கைகளும் இந்த அரசால் எடுக்கப்படவில்லை. மாறாக, வசதி குறைந்த - அன்றாடம் காய்ச்சிகளான - ஏழை மக்களிடமிருந்தே வரிச்சுரண்டல் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மீட்க முடியும் என இப்போதைய ஆட்சிப் பீடம் கனவு காண்கின்றது.

முன்னைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுத் தேரதலில் தனது கட்சி வெற்றி பெற வேண்டும் என்ற அரசியல் நோக்கத்தை எட்டுவதற்காக 90 ஆயிரத்து 400 கோடி ரூபா வரிச் சலுகையை அறிவித்து, நாட்டின் வருமானத்தை நாசமாக்கி, பொருளாதரத்தை அதல பாதாளத்தில் வீழ்த்தினார்.

கோட்டாவின் தவறான முடிவினால் இழந்து போன வரி வருமானத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய இறைவரித் திணைக்களம் முறையாக செயற்படவில்லை என்றும் சுட்டப்படுகின்றது.

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வரி கொள்கையைத் தவிர்த்து, நடைமுறையில் உள்ள வரி கொள்கை வலையமைப்பை சிறந்த முறையில் முறையாகச் செயற்படுத்தினால் தேசிய வரி வருமானத்தை முறையாக பெற்றுக் கொள்ளலாம் என்று ஏரான் விக்கிரமரத்ன கூறுவதும் அவதானிக்கப்பட வேண்டும்.

வரிகளை அதிகரித்தால் மாத்திரம் வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியாது. மறுபுறத்தில் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் வெளிநாட்டு முதலீடுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்? வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேசியத்தின் மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? - என்று எரான் விக்கிரமரத்ன கேள்வி எழுப்புவது நியாயமானதே.

# அபிவிருத்தி இணைத்தலைவராக வடிவேல் சுரேஷ் எம்.பி. நியமனம்

பதுளை மாவட்டத்தின் பசறை மற்றும் லுணுகல பிரதேச செயலக அபிவிருத்தி இணைத்தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி பதுளை மாவட்டத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கான இணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# குடியரசு தின விழாவில் குவாட் கூட்டமைப்பு தலைவர்கள் பங்கேற்பதற்கு வாய்ப்பில்லை



குடியரசு தின விழாவில் குவாட் கூட்டமைப்பின் தலைவர்கள் பங்கேற்க வாய்ப்பில்லை என தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்கா, இந்தியா, அவுஸ்ரேலியா, ஜப்பான் ஆகிய 4 நாடுகளின் கூட்டமைப்பான குவாட் கூட்டமைப்பின் இந்த ஆண்டுக்கான உச்சிமாநாடு ஜப்பானில் கடந்த மே மாதம் நடைபெற்றது.

ஜி7 உச்சி மாநாட்டின் இடையே இந்த உச்சி மாநாடு நடத்தப்பட்டது. இதில், ஜப்பான் பிரதமர் ஃபூமியோ கிஷிடா, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அவுஸ்ரேலிய பிரதமர் அந்தோணி அல்பனிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது, அடுத்த குவாட் உச்சி மாநாட்டை இந்தியா நடத்தும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

இந்தியாவின் குடியரசு தின விழா சிறப்பு விருந்தினர்களாக குவாட் தலைவர்களை பங்கேற்கச் செய்யும் நோக்கில், 2024 ஆம் ஆண்டுக்கான குவாட் உச்சி மாநாட்டை ஜனவரியில் நடத்த இந்தியா முன்வந்தது.

இந்தை நிலையில், ஜனவரியில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இருப்பதால், அந்த மாதத்தில் தன்னால் இந்தியா வர இயலாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறி இருக்கிறார்.

இதே கருத்தை ஜப்பான் பிரதமர் கிஷிடோவும் கூறி இருக்கிறார். ஜனவரி 26 ஆம் திகதி அவுஸ்ரேலியாவின் தேசிய நாள் என்பதால் அன்றைய தினத்தில் தன்னால் இந்தியா வர இயலாது என அல்பனிஸ் கூறியுள்ளார் தகவல் வெளியாகி உள்ளது.

இதன் காரணமாக, ஜனவரிக்கு பதிலாக வேறு மாதத்தில் குவாட் உச்சி மாநாட்டை நடத்த அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இந்தியாவை கேட்டுக்கொள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால், இந்திய குடியரசு தின விழாவின் சிறப்பு விருந்தினர்களாக குவாட் கூட்டமைப்பின் தலைவர்கள் பங்கேற்க வாய்ப்பு இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

# ராஜஸ்தான் முதல்வராக பஜன்லால் ஷர்மா தேர்வு



ராஜஸ்தான் முதல்வராக முதல்முறை சட்டப்பேரவை உறுப்பினர் பஜன்லால் ஷர்மா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ராஜஸ்தானில் சமீபத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தேர்தல் நடந்த 199 தொகுதிகளில் பா.ஜ.க. 115 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற்கான தகுதியைப் பெற்றது.

இதையடுத்து, முதல்வர் யார் என்ற கேள்வி கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக பரபரப்பாக பேசப்பட்டு வந்தது. முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா, எம்.பி.யாக இருந்து எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பாலக்நாத், கிரோரி லால் மீனா, தியா குமாரி ஆகியோரின் பெயர்கள் பேசப்பட்டன.

இந்த நிலையில், கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்றது. கட்சியின் மேலிடப் பார்வையாளர்களாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வினோத் தாவ்டே, சரோக் பாண்டே ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், கட்சியின் சட்டப்பேரவை தலைவராக, அதாவது முதல்வராக பஜன்லால் சர்மா தேர்வு செய்யப்பட்டார். பரத்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பஜன்லால் ஷர்மா, ராஜஸ்தான் மாநில பா.ஜ.க. பொதுச் செயலாளராக பணியாற்றியவர். ஜெய்ப்பூர் மாவட்டத்தின் சங்கானெர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட்ட இவர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் புஷ்பேந்திர பரத்வாஜை தோற்டித்து முதல்முறையாக சட்டப்பேரவை உறுப்பினார்.

நடந்து முடிந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது.

சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசங்களில் இதற்கு முன் முதல்வராக இருந்தவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். சத்தீஸ்கரில் விஷ்னு தியோ சாயும், மத்தியப் பிரதேசத்தில் மோன் யாதவும் முதல்வராக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அந்த வரிசையில், ராஜஸ்தான் முதல்வராகவும் புதிய முகம் தேர்வாகி உள்ளார்.

# சென்னையில் வெள்ள பாதிப்பை தடுக்க நிரந்தர தீர்வு



சென்னையில் தண்ணீர் தேங்காமல் இருக்க நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று வேளச்சேரி பகுதியில் மிக்ஜாம் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்த தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய ஆலோசகர் குணால் சத்யார்த்தி கூறியுள்ளார்.

மிக்ஜாம் புயல் பாதிப்பை மதிப்பிட்டு, மத்திய அரசு நிவாரணத்துக்கு பரிந்துரைக்க, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் சென்றுள்ள மத்திய குழுவினர், சென்னை தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் துறை செயலாளர்கள் உடன் ஆலோசனையில் ஈடுபட்டனர். பின்னர் இரண்டு குழுக்களாக பிரிந்து மத்திய குழுவினர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். புயலால் பாதிக்கப்பட்ட பட்டாளம், வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு நடத்தினார்.

# பல மாதங்கள் ஆனாலும் போராட தயார்: ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் எச்சரிக்கை

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் இரண்டு மாதங்களாகத் தொடர்ந்து வரும் நிலையில், ஹமாஸை தோற்கடிக்க பல மாதங்களானாலும் போராட தயார் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் – இஸ்ரேலில் அத்துமீறி தாக்குதலை நடத்தினர்.

இதில் 1200 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் பலியாகினர். 240 பேரை பிணைக்கைதிகளாகக் கடத்தி செல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் காசா மீது வான்வழி தாக்குதலை ஆரம்பித்ததோடு தரைவழி தாக்குதலாக விரிவுப்படுத்தி உள்ளது.

இதில் பலியான பாலஸ்தீனர்கள் எண்ணிக்கை 17 ஆயிரத்து 700 ஐ கடந்துள்ளதாகவும் இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசாவின் மக்கள் தொகையில் 



90 சதவிகிதத்தினர் இடப்பெயர்வுக்கு ஆளாகி இருகின்றனர் என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் போர் பிரகடனம் செய்து காசா மீது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகிறது.

ஹமாஸ் – இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் தேவை என உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் இஸ்ரேல் இராணுவ அதிகாரி யோவ் காலன்ட் கூறுகையில், “காசாவில் ஹமாஸ்க்கு எதிரான போர், எங்களுடைய இலக்கை அடைந்த பின்னர் முடிவுக்கு வரும்.

காசாவின் வடக்கு முனையில் ஹமாஸின் ஜபாலியா, ஷெஜையா பட்டாலியன் அகற்றப்படும் தருவாயில் உள்ளது.

நாங்கள் இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்து நெருக்கடி கொடுத்தால், அங்கிருந்து பிணைக்கைதிகளை விடுவிக்கும் வகையில் வாய்ப்புகள் வழங்கப்படும் என நம்புகிறேன்.

அப்படி அவர்கள் தெரிவித்தால், அதுகுறித்து நாங்கள் யோசிப்போம். கடந்த சில நாட்களாக ஹமாஸ் அமைப்பினர் சரணடைந்துள்ளனர்.

யாரெல்லாம் சரணடைகிறார்களோ அவர்கள் உயிர்கள் காக்கப்படும். இதன்படி ஹமாஸின் உயர்நிலை அதிகாரிகள் சரணடைய வேண்டும், அல்லது உயிரை தியாகம் செய்ய வேண்டும்” என்றார்.

# ஹொங்கொங் மாவட்ட சபைத் தேர்தலில் 27.5 வீத வாக்குகள் மாத்திரம் பதிவு



இங்கிலாந்திடம் இருந்து 1997 இல் சுதந்திரமடைந்த ஹொங்கொங் பின்னர் சீனாவின் நிர்வாக கட்டுப்பாட்டுக்குள் இருப்பினும் தற்போது வரை ஹொங்கொங் தன்னாட்சி பிராந்தியமாகவே செயற்படுகின்றது.

இதற்கிடையே இங்குள்ள குற்றவாளிகளை சீனா, தைவான் நாடுகளுக்கு கடத்தி விசாரிக்கும் வகையில் ஒரு சட்டத்திருத்த மசோதா 2019 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டது.

ஹொங்கொங்கை ஆதிக்கம் செலுத்தும் முயற்சி என கூறி நாடு முழுவதும் கடும் எதிர்ப்புகள் கிளம்பியதனையடுத்து அந்த மசோதா கைவிடப்பட்டது. எனினும் ஹொங்கொங் நிர்வாகத்தின் மீது மக்கள் அதிருப்தியில் இருந்தனர்.

இந்த நிலையில் அங்குள்ள மாவட்ட சபை தேர்தல் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதில் 27.5 சதவீதமான வாக்குகள் மாத்திரமே பதிவாகியுள்ளது.

இது ஹொங்கொங் நிர்வாகம் மீது மக்களின் அதிருப்தியை வெளிப் படுத்துகின்றது.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 71.2 சதவீதம் வாக்குகள் பதிவாகிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் இராணுவ தளத்தில் தாக்குதல்: 23 பேர் பலி

பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் டீரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் உள்ள இராணுவ தளத்தில் நேற்று தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


அதிகாலை நடந்த இந்த தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். 32 படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து, படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இந்த தற்கொலைப் படை தாக்குதலுக்கு பாகிஸ்தானி தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.



# கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையை கலைத்து வர்த்தமானி ஹரின் கையொப்பம்




Harin Fernando
@fernandoharin

Today, I signed a gazette to revoke the decision appointing an interim committee for Sri Lanka Cricket, aiming to lift our ICC suspension. I've also written to the ICC, seeking their observations on the Auditor General's report on SLC, and to the AG dept for future actions.

4:18 PM · Dec 12, 2023 · 5,518 Views

Sri Lanka Cricket

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமிக்கப்பட்ட கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையைக் கலைத்து, தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் நடவடிக்கைகளை இடைநிறுத்தி, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க கடந்த மாதம் 04 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் இடைக்கால நிர்வாக சபை நியமிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தச்சபையைகலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் தாம் நேற்று கையொப்பமிட்டார் எனத் தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தாக்கல் செய்த மனுவைப் பரிசீலித்து, முன்னாள் விளையாட்டு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையின் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததுடன், மனு மீதான விசாரணை இன்னும் நிறைவடையவில்லை.

அத்தோடு, இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

# அரச சேவைகள் தொழிற்சங்க ஒன்றியம் நேற்று சுகயீன விடுமுறைத் தொழிற்சங்கப் போராட்டம்



அரச, மாகாண அரச சேவைகள் தொழிற்சங்க ஒன்றியம் நேற்று நாடளாவிய ரீதியில் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது. இதற்கு இணையாகப் பல பகுதிகளிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் சம்பளத்துடன் 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


பத்தரமுல்லை – செத்சிரிபாயவிற்கு முன்பாக பிரதான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக நீர்த்தாரை வாகனங்களும் கலகத்தடுப்பு பிரிவினர்களும் அங்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், தமது சம்பளத்தை அதிகரிக்குமாறு ஆர்ப்பாட்டத்தின் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவாக வட மாகாண விவசாய போதனாசிரியர்கள் தொழிற்சங்கமும் பணிப்பகிஷ்கரிப்பில் நேற்று ஈடுபட்டது.

அரச மற்றும் மாகாண அரச ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையால் கிளிநொச்சி, இராமநாதபுரம், கமலநலசேவை நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன.




# மின்வெட்டு தொடர்பான அறிக்கை இதுவரைக் கிடைக்கவில்லையாம்

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பிலான முழுமையான அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுமென எதிர்பார்ப்பதாக ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், மின்சார சபையின் உயரதிகாரிகளை ஆணைக்குழு முன்னிலையில் அழைத்து காரணங்களைக் கேட்டறிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


இதனிடையே, நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு தொடர்பில் ஆராய வெளியகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, மின்வெட்டு தொடர்பிலான விசாரணைகளுக்காக அரச புலனாய்வு சேவைப் பிரிவின் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை 05.10 அளவில் நாடளாவிய ரீதியில் திடீர் மின்வெட்டு ஏற்பட்டது.

சுமார் ஐந்தரை மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் மின்விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வர முடிந்ததாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

கொத்மலை – பியகம மின்விநியோக கட்டமைப்பில் மின்னல் தாக்கமே மின்வெட்டு ஏற்படக் காரணம் என மின்சார சபை பின்னர் தெரிவித்திருந்தது.



# முட்டை விலை கூடினால் இறக்குமதி தொடருமாம்!

சந்தையில் முட்டை விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் இருந்து முட்டை இறக்குமதியை நிறுத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜா-எலயில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.



# அடையாள வேலைநிறுத்தத்தால் பத்து லட்சம் கடிதங்கள் தேக்கம்

தபால் ஊழியர்களின் அடையாள வேலைநிறுத்தத்தால் சுமார் 10 லட்சம் கடிதங்கள் கொழும்பு மத்திய தபால் பரிமாற்றகம் மற்றும் நாட்டின் ஏனைய தபால் அலுவலகங்களிலும் தேங்கியுள்ளன என்று ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான கட்டடங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் பிற்பகல் முதல் தபால் ஊழியர்களால் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் முடங்கியுள்ளன எனவும் மத்திய தபால் பரிமாற்றகத்திலிருந்து எந்தவொருதபால்பொருள்களையும்கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.



# பாடசாலைச் சுவர் இடிந்து வீழ்ந்ததில் சிலாபத்தில் இரு மாணவர்கள் காயம்!

**(ரஸீன் ரஸ்மின்)**

சிலாபம், அம்பகந்தவில புனித ரோகஸ் கனிஷ்ட வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக சுவர் நேற்றுப் பிற்பகல் இடிந்து வீழ்ந்ததில் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் பாடசாலையின் 11ஆம் தரம் மற்றும் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இரண்டு மாணவர்களும் சிகிச்சைக்காக சிலாபம் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் ஒருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார் எனவும், மற்றைய மாணவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு இடையில் உள்ள இடத்தை மூடுவதற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட மதில் ஒன்று இவ்வாறு இடிந்து வீழ்ந்துள்ளது.

அந்தச் சுவருடன் இணைக்கப்பட்டிருந்த ஒரு கேட்டை மூடுவதற்கு முயற்சித்த போது, அது இவ்வாறு இடிந்து விழுந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.



# பூநகரியில் சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டம் விலைமனு நடைமுறையின்றியே முன்னெடுப்பு!

## அனுரகுமார திசாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு

விலைமனு நடைமுறையின்றி கிளிநொச்சி - பூநகரி குளத்தில் சூரியசக்தி மின் உற்பத்தி திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

1727 மில்லியன் டொலர் முதலீட்டில் ஆஸ்ரேலியாவின் United Solar Group என்ற நிறுவனம் பூநகரி குளத்தில் சூரியசக்தி மின் உற்பத்தி முதலீட்டுத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

700 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி நிலையத்தில் 1500 மெகாவாட் மணித்தியால கொள்ளளவுடைய மின்கலக் கட்டமைப்பும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தத் திட்டத்தில் இருந்து மின் சாரத்தை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.



# நாட்டின் 3 மாவட்டங்களில் டெங்கு அபாயம் அதிகரிப்பு

புத்தளம், நாத்தாண்டி, குருணாகல், பதுளை மற்றும் ஹாலி-எல ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா மாவட்டங்களிலும் டெங்கு அபாயம் மேலும் அதிகரித்துள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி அஷானி ஹேவகே தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், நாட்டில் 80 ஆயிரத்து 222 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# ஆலய விக்கிரகங்களைப் புரட்டி கீழ் உள்ள நகைகள், பொற்காசுகளைத் திருடிய பூசாரி




ஆலய விக்கிரகங்களின் கீழ் உள்ள நகைகள் மற்றும் பொற்காசு என்பவற்றைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீவகம், ஊர்காவற்றுறையில் உள்ள இரண்டு ஆலய விக்கிரகங்களை மேலெழுப்பி அவற்றின் கீழ் இருந்த மோதிரம் மற்றும் பொற்காசு என்பற்றை அவர் திருடியுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

கொக்குவிலைச் சேர்ந்த 27 வயதுடைய பூசகரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பூசாரி போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும், கைது செய்யப்பட்டவரிடமிருந்து 5 பவுண் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெ.மேனன் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் பிரதீப்பின் குழுவே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டது.

# பூச்சிகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில்




**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ். மாவட்டத்தில் வேகமாகப் பரவிவரும் கபிலத் தத்தி, வெண்முதுகு தத்தி ஆகிய பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுய் இடம்பெற்றது.

யாழ் மாவட்டத்தில் வேகமாக பரவிவரும் கபிலத் தத்தி, வெண்முதுகு தத்தி ஆகிய பூச்சிகளை கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலக விவசாயப் பிரிவினரால் நேற்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன், மாகாண விவசாய பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், யாழ் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் சசிப்பிரபா கைலேஸ்வரன், விவசாயதிணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கபிலத் தத்தி, வெண்முதுகு தத்தி ஆகிய பூச்சிகளை முற்றாக கட்டுப்படுத்துவது தொடர்பாகவும், இவ்வகை பூச்சி இனங்களால் பாதிக்கப்பட்ட பயிர்களை பாதுகாப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சட்டவிரோத கிருமிநாசினி வகைகள் மற்றும் காலாவதியான கிருமிநாசினிகளைப் பாவனையில் இருந்து அகற்றுவது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.







# இரண்டு வருடங்களின் பின்னர் வான் பாய்கின்ற வவுனிக்குளம்

## பொங்கல் பொங்கிப் படைத்த விவசாயிகள்

**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் குளத்தின் நீர்மட்டம் நேற்று முன்தினம் அதிகாலை அதன் உச்ச எல்லையான 26 அடியைக் கடந்துள்ள நிலையில் குளத்தில் வான் பாய்ந்து நீரோடி வருகின்றது.

கடந்த இரு வருடங்களாக குளம் நிறைந்து வான் பாயாமல் நீர்மட்டம் குறைவான நிலையில் காணப்பட்டதால் விவசாய செய்கையில் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வருடம் கொட்டித் தீர்த்த மழை மற்றும் ஏனைய பகுதிகளில் இருந்து வவுனிக்குளத்திற்கு வரும் நீர் வரத்து என்பவற்றால் குளம் நிறைந்து வான் பாய்கின்றது

வான் பாய ஆரம்பித்துள்ள இந் நிலையில் நீர் மகளை வரவேற்கும் முகமாக கிராம அமைப்புக்களைச் சேர்ந்தோர் மற்றும் வவுனிக்குள நீர்பாசனத் திணைக்களத்தினர் நீருக்குப் பொங்கல் படையல் வைத்துத் தமிழர் பாரம்பரிய முறைப்படி வழிபட்டு நீர் பாய்வதை வரவேற்றனர்.

இந்த நிகழ்வில் மாகாண நீர்ப் பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் விகிர்தன், பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனை சிரேஷ்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சிவகரன், வவுனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரகாச்க், வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிப்பாளர் பணிமனை உத்தியோகத்தர்கள், மாங்குளம் பிராந்திய அலுவலகக உத்தியோகத்தர்கள், வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த வான் பாயும் காட்சியைக் காண்பதற்காக பலரும் அந்தப் பகுதிக்குச் சென்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அந்தப் பகுதி வான் பாய்கின்ற நேரத்தில் மிக அழகாகக் காட்சி அளிக்கின்ற போதும், குளத்தின் அந்தப் பகுதிகள் மற்றும் துருசு பகுதிகளுக்கு வருகை தந்து நீராடுகின்ற மற்றும் படங்கள் எடுக்கும் செயல்பாடுகளில் அநியாய உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் இவ்வாறான நடவடிக்கைகளை முற்றுமுழுதாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களை சமூக ஆர்வலர்களும், பொலிஸாரும் கோரியுள்ளனர்.













# வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தின் நிர்வாகத்தை தொடர்ந்தும் விடாது நோண்டுகின்றனர் பொலிஸார்

## நேற்றும் அழைக்கப்பட்டு மீண்டும் விசாரணை

(கி.வசந்தரூபன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலய நிர்வாகத்தினர் நெடுங்கேணி பொலிஸாரால் அழைக்கப்பட்டு நேற்று மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா வடக்கு, ஓலுமடு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயம் தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்தப் பகுதியில் புத்தர் சிலையும் வைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றிருந்தமையுடன், ஆதிசிவன் ஆலய விக்கிரகங்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் பல்வேறு போராட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகளின் பின்னர் தொல்பொருள்களைச் சேதப்படுத்தாது வழிபாடு செய்வதற்கு வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பூசகர் ஆகியோரை அழைத்த நெடுங்கேணி பொலிசார் அவர்களிடம், 2019-2020ஆம் ஆண்டு வருடாந்தத் திருவிழாவிற்கு அனுமதி தந்தவர்கள் யார்?, 2019ஆம் ஆண்டு ஏணிப்படி அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியவர் யார்?, ஏணிப்படியை மலைக்கு கொண்டுசென்று நிறுவியவர்கள் யார்?, 2019-2020ஆம் ஆண்டு திருவிழாவிற்கு ஒலி பெருக்கியைப் பயன்படுத்த அனுமதி தந்தவர் யார்?, 2019ஆம் ஆண்டு ஆலய சூழலை அடையாளப்படுத்தும் நோக்கில் சில முக்கிய மரங்கள் தொல்பொருள் சாராத இடங்களுக்கு வெள்ளை நிற சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தது. அதனைச் செய்தவர் யார்? என விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# புத்தளம் - கற்பிட்டிக் கடல் பிரதேசத்தில் டொல்பின்களின் வசந்த காலம் ஆரம்பம்!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கற்பிட்டிக் கடலில் டொல்பின் வசந்த காலம் தற்போது ஆரம்பமாகிவிட்டது.

விளையாட்டுத்தனமான டொல்பின்கள் மற்றும் இராட்சதத் திமிங்கலங்கள் அலைகளில் சுதந்திரத்தை அனுபவிப்பதை நேரில் காணக்கூடியதாக உள்ளது.

டொல்பின்கள் மற்றும் திமிங்களங்களை டிசம்பர் முதல் அடுத்த வருடம் ஏப்ரல் இறுதி வரை அவ்வப்போது காணலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக காலை நேரங்களில் டொல்பின்களைப் பார்பது எளிதாக இருக்கும்.

இந்த டொல்பின் மற்றும் திமிங்கலங்களை இலந்தையடி, கண்டகுழி, கற்பிட்டி ஆகிய கடற்பிரதேசங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

டொல்பின்கள், பாட்டில்நோஸ் டொல்பின்கள், புள்ளிகள் கொண்ட டொல்பின்கள், ஃப்ரேசரின் டொல்பின்கள் மற்றும் இந்தோ-பசிபிக் ஹம்பக் டொல்பின்களும் கற்பிட்டி கடலில் காணப்படுகின்றன.

அத்துடன் திமிங்கலங்கள் வகையான நீலத் திமிங்கலங்கள், மின்கே திமிங்கலங்கள் மற்றும் ஹம்பக் திமிங்கலங்களும் கற்பிட்டிக் கடலில் காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 13.12.2023




இன்று உங்கள் முயற்சிகளை தைரியமாக மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மனதில் உள்ள கவலைகளை எதிர்கொண்டு வெற்றி காண முடியும்.

இன்று நேரத்துடன் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். என்றாலும் திட்டமிடுவதன் மூலம் பணிகளை சமூகமாக ஆற்ற இயலும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வீண்டும். கவனமற்ற வார்த்தைகள் உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

வீணான செலவுகள் காணப்படும். பணத்தை கவன மாகக் கையாள வேண்டும். அதன் மூலம் நஷ்டத்தை தவிர்க்கலாம்.

தூக்கமின்மை காரணமாக சில பிரச்சினைகள் ஏற்படும். கால் வலியால் நீங்கள் பாதிக்கப்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மான பலன்களை அளிக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பல னைத் தரும். உங்கள் இலக்குகளை நிறை வேற்ற பாடுபடுவீர்கள்.

உங்களின் அபாரமான செயல் திறன் பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற்றுத் தரும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மனம் திறந்து கூறுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே நல்லுறவு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். பணம் நிறைந்து காணப்படும்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. உங்களிடம் காணப்படும் உற்சாகம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைப்பதற்கு சாதகமான நாள். உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமை மூலம் வெற்றி காண்பீர்கள். நம்பிக்கை உணர்வின் காரணமாக மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

இன்று குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணத்திற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். வெளியிடங்களுக்கு செல்வ தன் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலைதூரத்திலிருந்து கிடைக்கும் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நிறைந்த மன நிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கி யத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றி யடைய சாதகமான நாளாக இருக்காது. என்றாலும் திடமான போக்குடன் கடின மாக உழைத்தால் வெற்றி பெற இயலும்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை தேவை. முறையாக திட்ட மிட்டால் இன்றைய இறுக்கமான பணிகளை திறமையாக கையாள முடியும்.

உங்கள் மனதில் குழப்பங்கள் காணப்படும். அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். தேவை யற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப் படும்.




இன்று சில பிரச்சினைகள் காணப் படும். அவற்றை நீங்கள் சாமார்த்திய மாக கையாள வேண்டும். விவேகமாக நடந்து கொள்ள வேண்டும். பிறருடன் பேசும்போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் எச்சரிக்கையாகப் பழக வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான உறவு பாதிக்கும். உங்கள் துணையிடம் பொறுமையை கடைபிடிப்பது சிறந்தது.

இன்று நிதிநிலைமையில் கட்டுப்பாடுகள் காணப்படும். உங்கள் பணத்தை திட்டமிட்டு கையாள வேண்டும். தேவை யற்ற செலவுகள் வருத்தத்தை ஏற்படுத்தும்.

சளி அல்லது இருமலால் பாதிப்பு ஏற்படலாம்.




இன்று உங்கள் திறமைகளை நிரூபிக்கும் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். இன்று பிரகாசமான வாய்ப்புகள் காணப்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

உங்களின் சிறப்பான செயல்திற னுக்கு உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறு வீர்கள். உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

நேர்மை மற்றும் ஒட்டி உறவாடுவதன் மூலம் அன்பு பிணைப்பை வளர்க்க முடியும். முக்கியமான முடிவு களை எடுப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று புதிய பயனுள்ள முதலீடுகளை செய்வீர்கள். உங்களிடம் அதிக பணம் காணப்படும். பணத்தை சேமிப் பீர்கள்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். பொறுமை அவசியம். அமைதியாக இருப்பதன் மூலம் உணர்ச்சிப்பூர்வமான சூழ்நிலைகளை சமாளிக்க இயலும்.

பணியிடச்சூழல் சாதகமாக இருக்காது. பணியில் பதட்டம் காணப்படும். இதனால் கவலை ஏற் படும்.

சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. உங்களின் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளி படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

கால் வலி மற்றும் பல் வலி ஏற்படலாம். சரியான மருத் துவ சிகிச்சை மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்க லாம்.




உங்கள் இலக்குகளில் வெற்றி பெற பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் செயல்களில் வேகத்தை தவிர்க்கவும். உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம்.

பணிகள் அதிகமாக காணப்படும். ஒத்துழைப்பு தராத சக பணியாளர்களால் தூண்டப்பட்டு கோபமடைவீர்கள்.

உங்களின் குழப்பமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். சிறந்த புரிந்துணர்வுக்கு உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவினங்களால் கவலை ஏற்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.12.2023




இன்று நீங்கள் சிறிய மற்றும் பெரிய பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்களால் முடிந்த அளவு முயற்சி மேற்கொள்ளுங்கள். நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருங்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றத்தை அளிக்காது. முறையாக திட்டமிட்டு பணிகளை கையாள வேண்டும்.

நீங்கள் எளிதான விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும். போதிய பணம் இல்லாத காரணத்தினால் அதிகரிக்கும் செலவுகள் மற்றோம் பொறுப்புகளை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

ஒவ்வாமை காரணமாக சளி அல்லது இருமல் ஏற்படலாம்.




இன்று உங்களின் உறுதி காரண மாக சாதகமான பலன்கள் கிடைக்கும் வாய்ப்புள்ள நாள். இன்றைய நிகழ்வுகள் மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் செயல் திறனில் திருப்தியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும்.

வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நல்ல மன உறுதி காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்று சிறப்பான சூழ்நிலைகள் காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு கடினப் பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள்.

உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க லேசான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் துணையிடம் நம்பிக்கை வரும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

பூர்வீகச் சொத்து வகையில் இன்று பண வரவு காணப்படும். கணிசமான தொகையை சேமிப்பீர்கள்.

உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். இதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சற்று கடினமான நாள். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும். ஆன்மீக யாத்திரை அல்லது புனித யாத்திரை ஆறுதலை அளிக்கும்.

நீங்கள் மேற்கொள்ளும் பணியில் அதிருப்தியும் அசௌகரியமும் காணப்படும். உங்கள் செயல்திறனில் கவனம் செலுத்துங்கள். சகபணியாளர்களின் பொறாமைக்கு ஆளாவீர்கள்.

நல்ல புரிந்துணர்வு இல்லாத காரணத்தினால் தகவல் தொடர்பு பிரச்சினைகள் காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதிநிலைமை இன்று ஏமாற்றகரமாக இருக்கும். நிதி சம்பந்தமான முடிவுகள் இன்று எதிர் விளைவை ஏற்படுத்தும் என்பதால் அதனை தவிர்க்க வேண்டும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park